# தமிழ்ப் பண்பாட்டில் மனிதநேயம்

முனைவர் இரா.விஜயகுமார்

உதவிப்பேராசிரியர், தத்துவம், சமயம் மற்றும் பண்பாட்டுத்துறை,

பூம்புகார்க் கல்லூரி (தன்னாட்சி), மேலையூர் - 609107.

vijayyoga17@gmail.com

24

**முன்னுரை**

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பார் ஔவையார். "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்பார் திருநாவுக்கரசர். எனவே பெறுதற்கரிய பிறவி மானிடப் பிறவி அப்படிப்பட்ட இப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் இப்பிறவியின் பயனை நன்றாக உணர்ந்து வாழ வேண்டும். பிறரையும் வாழ்விக்க வேண்டும்.

உலகில் வாழும் உயிரினங்களுள் தலைமை சான்ற மனித இனங்குறித்து தொல்காப்பியர் அவர்கள்

"மக்கள் தாமே ஆறறி வுயிரே" (தொல். மரபியல் - 33)

"ஆறறி வதுவே அவற்றொடு மனனே" (தொல். மரபியல் - 27)

என்று விளக்குவார். பிறவுயிர்களைக் காட்டிலும் ஆறாவது அறிவைப் பகுத்தறிவை – நல்லதன் நலனும் தீயதன் தீமையும் நாடும் அறிவைப் பெற்றவர்கள் மனிதர்கள் என்பதும் அவ்வறிவு மனத்தோடு தொடர்பு கொண்டது என்பதும் தொல்காப்பியர் கருத்து. மனத்தின் வழி இயங்குபவன் மனிதன். மனிதனை மனிதனாக நிலைநிறுத்துவது மனம்.

"மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்

எல்லாப் புகழும் தரும்" (குறள் - 457) என்பது வள்ளுவர் வாக்கு.

இப்படிப்பட்ட கருத்துகளைத் தனிமனித மனங்களில் கூறுவதன் வழியாக வள்ளுவர் அவன் இனத்தையும் கூறுகிறார். உயர்ந்த எண்ணங்களைச் சிந்தித்து அவற்றின் வழி நடக்க வேண்டும் என்ற நோக்கம் மனித குலத்தின் சிறப்பு, சிந்திக்கும் ஆற்றல் வாய்ந்த மனிதனால் மட்டுமே மனிதநேயத்தைப் போற்ற முடியும்.

**மனிதநேயம்**

மனிதநேயம் என்பது நாடு, இனம், மொழி என்ற எலைகளைக் கடந்து நிற்பது. மனித இனத்தின் நாகரீகப் பண்பாட்டு வளர்ச்சியோடு பிணைந்து நிற்பது. மனிதநேயம் என்பது ஓர் உயரிய பண்பாடு. இப்பண்பாட்டினால் மக்களிடையே அன்பு வளரும், ஏற்ற தாழ்வுகள் நீங்கும், ஒப்புரவு நிலைக்கும், மனித ஆற்றல்கள் உயரும், மனிதமதிப்புகள் போற்றப்பெறும். இனம், மொழி, நிறம், மதம் ஆகியவற்றால் வேற்றமைப்பட்டுக் கிடக்கும் மக்கள் ஒன்றுபடுவர் உலக மக்களிடையே ஒற்றுமை ஓங்கும். மானுடம் போற்றுவதே மனித நேயம் எனப்படும்.

**அன்பின் சிறப்பு**

நேயம் என்பது அன்பு, அன்புதான் நாம் வாழ்வதற்கும் பிறரை வாழ்விப்பதற்கும்

அடிப்படையான பண்பு. இல்லறம் அன்பை வளர்க்கும் நாற்றங்காலாகத் திகழ்கிறது. இல்லறத்தின் அடிப்படையான பண்பு அன்பு. இல்லறத்தின் முடிந்த பயன் அறம், தாய், தந்தை, மனைவி, மக்கள், உற்றார், சுற்றம், நட்பு போன்ற உறவுகளை வளர்ப்பதும், அவ்வுறவுகளோடு நம்மைப் பிணைப்பதும் அன்புதான். நாம் இந்த மனிதப் பிறவி எடுத்ததன் பயன் நாம் பிறரிடம் அன்பு காட்டுவதற்கும், பிறரால் அன்பு காட்டப்படுவதற்கும் தான், அன்பு இல்லையேல் அகிலமே இல்லை.

அனைத்துச் சமயங்களும் அன்பு செய்வதையே வலியுறுத்துகின்றன. அன்பும் சிவமும் ஒன்றென்பார் திருமூலர். அன்பைத் தகளியாகவும் ஆர்வத்தை நெய்யாகவும் இன்புருகு சிந்தையை இடு திரியாகவும் கொண்டு நாராயணனை வழிபடுகிறது வைணவம். காணா உயிர்க்கும் கையற்று ஏங்கி உயிர்களை ஓம்புகிறது சமணம். அன்புதான் உலக ஒளி அன்புதான் உலக மகா காவியம் என்றுரைக்கிறது

பௌத்தம். இவ்வாறு சமயங்களும் அன்புவாழ்க்கையே இன்பவாழ்க்கை என அறிவுறுத்துகின்றன.

அன்பு இயற்கையான உணர்வு. மக்கள் எல்லோரிடத்திலும் அது இயல்பாக அமைந்திருக்கிறது. நெருங்கிய சுற்றத்துடன் நாம் கொள்ளும் அன்பு ஆர்வமாக வளர்ந்து அவர்களைச் சார்ந்தோரையும் நமக்கு சுற்றம் ஆக்குகிறது. அன்பின் விரிந்த எல்லை அருளைத் தோற்றுவிக்கிறது. தொடர்பு இல்லாதவரிடமும் நாம் கொள்ளும் அன்பே உள்ள நெகிழ்ச்சியாகிய உணர்வே அருள் எனப்படும். மனித உயிர்களிடம் மட்டுமின்றி ஏனைய உயிர்களிடமும் அவ்வருள் பரந்து விரிந்து மனித நேயமாக மலர்கிறது.

**சங்க இலக்கியத்தில் மனித நேயம்**

ஈராயிரம் ஆண்டுக்கு முற்பட்ட தமிழினம் மனிதநேய மாண்புடையதாக விளங்கியதைப் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. சங்கப் பாடல்களைப் பாடிய புலமைச் சான்றோர் உலகுக்கு அறவுரைகளாகக் கூறிய அறிவுரைகள் மனிதநேய மாண்பினை விளக்குவன. மேலும் இன்று பேசப்படுகின்ற தேசிய ஒருமைப்பாடு, உலகமயமாக்கல் போன்ற கருத்துகளுக்கு மூலமாக, முதல் விதையாக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது தமிழன் விதைத்துவிட்டான். அதுதான் கணியன் பூங்குன்றனாரின்,

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்னும் ஒப்பற்ற கருத்து, தமிழின் வரலாற்றில் பொன்னேடுகளில் பதிந்த கருத்து ஆகும். இதில் உலகம் ஒன்றே உலக மக்கள் அனைவரும் உறவினர் என்னும் ஓருலகக் கோட்பாட்டு கூறப்படுகிறது.

மனிதர்களிடம் மட்டும் அன்பும் அருளும் கொண்டவர்களாக அமையாது. அதற்கு அப்பாலும் சென்று, ஓரறிவுடைய முல்லைக் கொடிக்குப் பற்றிப் படர்தற்குத் தான் ஏறிவந்த தேரை ஈந்தான் வேள்பாரி. கார்காலம் கண்டு களித்தாடிய ஐந்தரிவுடைய மயில் குளிரால் நடுங்குவதாகக் கொண்டு தன் போர்வையை அளித்தவன் வள்ளல் பேகன். படைமடம் படாத பாரியும் பேகனும் கொடை மடம் பட்டதாய்ப் போற்றினர் புலமையோர்.

வரிசைக்கு வருந்தும் பரிசில் வாழ்க்கையை உடைய புலவர்கள் தாம் வறுமையுற்று வாடியபோதும் தம் புலமைக்குப் பரிசாக வள்ளல்களிடம் பெற்ற பொருளைச் சுற்றம் அருந்தியும்

வறுமையுற்றோருக்கு வாரி வழங்கியும் வந்தனர்.

நின்னயந் துறைநர்க்கு நீநயந் தரைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழுநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோறு கென்னா தென்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்து மென்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே

என்று பெருஞ்சித்தரனாரின் பாடல் சங்க கால மக்களின் மனித நேயப் பண்பினைப் புலப்படுத்துகிறது.

**வள்ளுவர் காட்டும் மனிதநேயம்**

வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறிகளை வகுத்துக் காட்டும் திருக்குறள் ஒரு வாழ்க்கை இலக்கியம். மனித வாழ்வின் மாண்புக்கான இலக்குகளைக் குறிக்கோள்களை வள்ளுவர் பல அதிகாரங்களில் விளக்கியுள்ளார். மனித மனம் பண்படுவதைக் காமத்துப்பாலிலும், பயன்படுவதை அறத்துப்பாலிலும் பண்படுவதையும் பயன்படுவதையும் பொருட்பாலிலும் எடுத்துக்காட்டியுள்ளார். அன்புடைமை, அருளுடைமை, ஒப்புரவு, ஈகை, வாய்மை, கண்ணோட்டம், சான்றாண்மை, குடிமை, பண்புடைமை ஆகிய அதிகாரங்கள் மனிதநேயத்தில் ஊற்றாக நின்று மானிடத் தன்மைகளைப் பேணி வளர்ப்பன.

பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (குறள். 972)

என்று கூறும் வள்ளுவர் வகுக்கும் அறம் எல்லோர்க்கும் பொது அறம். ஒப்புரவாளரின் செல்வம் ஊர் நடுவே உள்ள பழுமரம் போன்று ஊருணி போன்று மருந்து மரம் போன்று எல்லோருக்கும் பயன்படும் என்று உவமையால் விளக்கியுள்ளார். மேலும் பிற உயிர்களின் துன்பத்தைப் போக்குதல் அறிவுடையோரின் கடமை என்று அறிவுறுத்தியுள்ளார்.

தன்னுயிர் இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல் (குறள். 318)
கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும் (குறள். 260)

ஆகிய குறள்கள் இவ்வுண்மையை உணர்த்தும்.

இவ்வாறு வள்ளுவர் கூறும் அறங்கள் நாடு, இனம், மொழி, காலம் ஆகிய எல்லைகளைக் கடந்தது. உலகோர் அனைவர்க்கும் பொதுவானதாக உள்ளது.

**வள்ளலார் காட்டும் மனிதநேயம்**

வள்ளலார் உயிர்க்கொலை கூடாது என்று உயிரிரக்கத்தை வலியுறுத்தினார். கடவுள் ஒருவரே எல்லா மதங்களின் கொள்கையும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று சமரச சுத்த சன்மார்க்கத்தை

நிறுவினார். உண்மையான வழிபாடு பசித்தவரின் பசிப்பிணியைப் போக்குதலே என்று சத்தியதருமச் சாலையை நிறுவினார். அனைத்துயிரும் ஒன்று என்று என்னும் அருளாளர் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உணர்வினை வலியுறுத்தியவர்.

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோ ரரிந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்
நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்
நேர்உறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின்மா னிதளாய் ஏழைகளாய் நெஞ்
கிளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்

(பிள்ளைப்பெரு விண்ணப்பம். 5)

மேலும் பசியோடு இருக்கும் மக்களைக் கண்டு உளம் பதைக்கிறார் பிணியோடு இருக்கும் நோயாளர்களைக் கண்டு உளம் வருந்துகின்றார். அதைத் தீர்க்கும் சக்தியைத் தருமாறு இறைவனிடம் வேண்டுகிற போதுதான் வள்ளலாரின் மனிதநேயத்தை உணர முடிகிறது.

**பாரதியாரின் பார்வையில் மனிதநேயம்**

இந்திய நாட்டின் மகாகவி என்று போற்றப்படும் பாரதி அவர்கள் இளைய சமுதாயத்தினர் மனத்தில் பதியவேண்டி,

“சாதிகள் இல்லையடி பாப்பா – குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதி கல்வி – அன்பு
நிரம்ப உடையவர்கள் மேலோர்” என்றார்.

மேலும் பாரதியின் உள்ளம் அன்புள்ளம் – அருளுள்ளம் தாயுள்ளம் எனவேதான்

“உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்” என்கிறார்
“காக்கை குருவி எங்கள் சாதி – நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்”

என்று பாடுகின்றார். மனித குலத்தோடு நின்றுவிடாமல் உயிருள்ள பொருள்கள் உயிரற்ற பொருள்கள் ஆகிய அனைத்தையும் தம் இனமாகக் காணுதலும் மேலும் மனிதநேயமாக விரிந்து நிற்பதையும் இங்குக் காணமுடிகின்றது.

**பாரதிதாசன் பார்வையில் மனிதநேயம்**

“மானுட சமுத்திரம் நானென்று கூவு
பிரிவிலை எங்கும் பேதமில்லை”

என்று மானுடம் போற்றும் மாண்புடையவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

உலகமெலாம் ஒன்றே என்னும் தூய உள்ளம் அது அன்புள்ளம் தொல்லுலக மக்களெல்லாம்

ஒன்றே என்று எண்ணும் தாயுள்ளம் அத்தகைய உள்ளம் வாய்க்கப்பெற்றால் உலகம் போரின்றி அமைதியில் திளைக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றார்.

அன்பு சமத்துவமும் மனித வாழ்வின் இலக்குகள் வாழ்வின் வெற்றிக்கான அடிப்படையும் வல்லமையும் மானிடத்தின் தன்மையே என்பதை

“வான்திசை எங்கனும் நீபார் – வாழ்வின்
வல்லமை மானிடத் தன்மை என்றே தேர்”

என்று எடுத்துரைக்கிறார் புரட்சிக்கவிஞர்.

**முடிவுரை**

இன்று சாதியின் பெயரால் மதத்தின் பெயரால் இனத்தின் பெயரால் நாட்டின் பல பூசல்கள் நடைபெறுகின்றன. ஒரு வீட்டிற்குள்ளேயே – ஒரு குடும்பத்திற்குளேயே உறவுகள் பிளவுபடுகின்றன. வேறுபாடுகள் வளர்கின்றன. கொலை, கொள்ளைகள் மலிந்து வருகின்றன. ஒழுக்கக்கேடுகள் மிகுந்து வருகின்றன. இவற்றிற்கு எல்லாம் அடிப்படைக் காரணம் என்ன? நமது பண்பாட்டை மறந்ததும் இன்றைய இளைய சமுதாயத்திற்கு பண்பாட்டு கல்வி போதிய அளவுக்கு கற்பிக்கபடாமையும் ஆகும். அதனால்தான் இன்றைய சமுதாயம் வெறும் இயந்திரமயமாக வாழ்கின்றது. அன்பு இல்லாது, மனித நேயம் இல்லாது ஒரு வறண்ட நிலம்போல இச்சமூகம் இருக்கின்றது. எனவே இனிவரும் காலங்களிலாவது அனைவரும் அன்பு, அறமும், மனித மாண்பும் நிறைந்த நமது பண்பாட்டு கல்வியாகிய தமிழ் இலக்கியங்களையும், தமிழ் மெய்யியலையும் அனைவருக்கும் கற்பிப்போம்.

மேலும் வாழ்க்கைக்குச் வழிகாட்டிடும் இலக்கியங்களைக் கற்று நம் முன்னோர்கள் காட்டியுள்ள நன்னெறியில் செல்லுதல் நலம் பயக்கும். மனிதநேயம் மாண்புறும், சமத்துவம் மலரும், சகோதரத்துவம் வளரும், உலகம் உய்யும் என்பது திண்ணம்.

**துணைநூற்பட்டியல்**

1. முனைவர் பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், தி.பதிப்பு. 1999. சூலை, மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம்-01.
2. மதுரை இளங்குமரனார், திருக்குறள் வாழ்வியல் முறை, நான்காம் பதிப்பு, 2002, திருவள்ளுவர் தவச்சாலை, திருவளர்குடி, அள்ளூர், திருச்சி.
3. தமிழ்தென்றல் திரு.வி.க., வள்ளலார், மறுபதிப்பு 2001, மணவாசகர் பதிப்பகம், 8-7. சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-8.
4. தமிழர் நாகரிகமும் பண்பாடும், முனைவர் த. தெட்சிணாமூர்த்தி.
5. தொல்காப்பியம், கழகப் பதிப்பு.